# ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ்
# வினா விடை நேரம்
# வினா எண் 307

## தலைப்பு ஆன்மீக பேரறிவு-அது பற்றிய   உதாரணங்கள்

எங்கள் அன்பிற்குரிய பேராசிரியர் திரு.அனில்குமார் சாய்ராம் சாரின் சத்யோபநிஷத் தொகுதி புத்தகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்வி பதில் பகுதி. 1, பக்கங்கள் 13-18.

கேள்வி :ஸ்வாமி நாங்கள் பேரரசர் தசரதரை பற்றியும் அவர் செய்த புத்ர காமேஷ்டி யாகம் பற்றியும் கேள்வி பட்டிருக்கிறோம்.
நீங்கள் எங்களுக்கு அரசர் ஜனகர் பற்றி சொல்ல வேண்டும் ஸ்வாமி

ஸ்வாமயின் பதில்
ஜனகர் ஓர் ராஜயோகி ஆவார்.
உடலையும் புலன் உணர்வுகளையும் கடந்த சிறந்த ஞானி ஆவார்.
இதனால் அவர் விதேஹர் அதாவது உடல் பற்றினை கடந்தவர் என்று அழைக்கப்பட்டார்.
அவருடைய திரு மகளான ஸீதாபிராட்டி வைதேகி என்று அழைக்கப்பட்டார்.
ஜனக மகராஜா சிறந்த குரு பக்தி கொண்டவராகவும் சாஸ்திர ஞானம் மிக்க வராகவும் உலகியலான பற்றுதல்களை துறந்தவராகவும் விளங்கினார்
அவர் ஸீதாபிராட்டியை ஸ்ரீ ராமருக்கு திருமணம் செய்து கொடுத்த பின் அவர்கள் வன வாசம் செல்ல நேரிட்ட போது அதில் தலையிடாமல் வைராக்கியத்துடன் ஒதுங்கி இருந்தார்.

கேள்வி:ஸ்வாமி ஆதிசங்கரர் இளம் வயதிலேயே இயற்கை எய்தினார் என்று கேள்வி படுகிறோம்
எதனால் அப்படி ஆயிற்று ஸ்வாமி

ஸ்வாமியின் பதில்
அத்வைத சித்தாந்தத்தை அதாவது சிருஷ்டி அனைத்தும் இறைவனே இங்கே இறையை தவிர இரண்டாவதாக எதுவுமே இல்லை என்ற சித்தாந்தத்தை இந்த உலகிற்கு அளித்த ஆதி சங்கரர் இளம் வயதிலேயே இயற்கை எய்தினார்.இவர் மூன்று முக்கியமான புனித நூல்களான உபநிஷதம் பிரம்ம சூத்ரம் பகவத்கீதை ஆகியவற்றிற்கு விளக்க உரையும் எழுதியுள்ளார்

ஞான மார்கத்தையே வலியுறுத்திய ஆதிசங்கரர் பக்தி மார்கத்திற்கான கீர்தனைகளையும் இயற்றியுள்ளார்இவர் பாரத தேசம் முழுவதும் சுற்று பயணம் செய்து பீடம் என்று அழைக்கப்படும் ஆன்மீக கலாச்சார செயல்பாட்டு மையங்களை ஸ்தாபிதம் செய்தார்
பாரத தேசத்தின் மிக பழமையான ஆன்மீக மையமான காசி ஷேத்திரத்திற்கு அவர் சென்றிருந்த போது காசி விஸ்வநாதரிடம் மூன்று தவறுகளுக்காக தன்னை மன்னித்து விடுமாறு வேண்டி கொண்டார்
ஏனென்றால் தான் சொல்லிய வண்ணம் செயல் படாமல் போனதற்காக வருத்தப்பட்டார்.
அதாவது இறைவன் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்தவன் என்று தான் சொல்லி வந்த போதும் எல்லா இடத்திலும் நிறைந்துள்ள காசி வில்வநாதரை தரிசனம் செய்ய காசிக்கு தேடி வந்தது சரியல்ல
இரண்டாவது தெய்வீகத்தை யாராலும் முழுமையாக ஒரு போதும் விள்கிடவோ விவரிக்கவோ இயலாது என்று தெரிந்தும் அவ்வாறு விவரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு பல வியாக்யானங்களை தானே எழுதியது சரியல்ல.
மூன்றாவதாக ஒன்றேயான பரம் பொருள் பலவானதாக வியாபித்து நிற்கின்றது. சிருஷ்டி அனைத்துமே யாதுமாகி நிற்கின்ற அந்த பரம்பொருளே ஆகும் என்பதை தான் உணர்ந்து கொண்ட போதும் தானும் தன்னுடைய சீடர்களும் வேறு வேறு என்று எண்ணி பீடங்களை ஸ்தாபித்ததும் சரியான செயல் அல்ல.

ஆதி சங்கரர் வாழ்க்கையில் நடந்த இன்னொரு சம்பவத்தையும் நீங்கள் கேள்வி பட்டிருக்கலாம்.
அவர் சந்நியாசம் மேற் கொள்ளும் முன் தன் தாயிடம் அனுமதி கேட்கிறார்.தாயோ அனுமதி அளிக்கவில்லை
அம்மா நான் நதிக்கு சென்று நீராடிவிட்டு வருகிறேன் என சொல்லி ஆதி சங்கரர் நதிக்கு செல்கிறார்.
நதியில் குளிக்கும் போது தன் கால்களை முதலை ஒன்று பற்றி இழுப்பதாக தன் தாயிடம் கதறி அழுகிறார். தான் சந்நியாசம் ஏற்றால் தான் முதலை தன்னை விடுவிக்கும் என தாயிடம் கூறுகின்றார்
இதனால் பயந்து போன தாயார் ஆதி சங்கரர் சந்நியாசம் ஏற்க அனுமதி அளிக்கிறார்.
இங்கு நதி என்பது சம்சாரமாகும்.
உலகாயதமான வாழ்க்கை முதலை ஆகும்
உலகியல் காரணங்களினால் மனிதன் சம்சாரத்தில் மாட்டி கொள்கிறான். ஆசைகளிலிருந்து விடுதலை எனும் துறவறம் மேற்கொள்ளும்போது சம்சாரத்தின் சுழற்சியிலிருந்து விடுதலை அடைகிறான்.

தான் செய்து முடிக்க எண்ணிய ஆக்க பூர்வமான பணிகள் நிறைவடைந்ததும் பொறுப்பை சீடர்களிடம் விட்டு விட்டு அவர் விண்ணுலகம் சென்று விடுகிறார். அவருடைய சீடர்களோ மிக சிறந்த ஞான முடையவர்களாதலின் அவருடைய பணிகளை திறம்பட நடத்தி சென்றனர்.

அடுத்த கேள்வி
ஸ்வாமி ஸ்ரீதியாகராஜர் மிக சிறந்த ராம பக்தர் என்பதும் அவருடைய புகழ் பெற்ற சங்கீத கீர்தனைகள் இன்றளவும் வெகு ஜனங்களின் மாபெரும் வரவேற்பை பெறுவதையும் நாங்கள் அறிவோம்
இதன் தனிசிறப்பை தாங்கள் எங்களுக்கு விளக்க வேண்டும் ஸ்வாமி

ஸ்வாமியின் பதில்
உலகத்தின் பக்தர்கள் பலரும் இறைவன் மீது பக்தி பாடல்கள் இயற்றி இறைவனை ஆராதித்து கொண்டு தான் உள்ளனர்.
இறைவனும் அவர்களின் உண்மையான பக்திக்கு செவிசாய்க்கவும் செய்கிறார்
ஆனால் தியாகராஜரின் ஒவ்வொரு கீர்த்தனையும் அவருக்கு கிட்டிய உண்மை இறை அனுபவத்தை பிரதிபலிப்பதாக தாக இருந்தது.
உதாரணமாக அரசன் தியாகராஜருக்கு விலை உயர்ந்த பரிசு பொருட்களை அனுப்பிய போது அவற்றை எல்லாம் பெற மறுத்துவிட்டு தன்னுடைய மன உணர்வுகளை பிரதிபலிக்கும் விதமாக "ராமா உன் சந்நிதி சேவையில் கிடைக்கும் பேரானந்தம் வெறும் பொருட்செல்வத்தினால் கிட்டி விடுமா என்று பாடுகிறார்.
அதே போல் அவருடைய சகோதரர் ராம விக்ரகத்தை காவிரி நதியில் வீசி விட்ட போது தன்னுடைய ராமரை வீட்டில் காணவில்லையே என்று கதறி அழுகிறார்.
ஊர் ஊராக சென்று பல இடங்களில் தேடி அலைகிறார்.
இறுதியில் காவிரியில் நீராடும் போது ஸ்ரீராமரை கண்டெடுத்த உடன் ஆனந்தத்தில் துள்ளி குதித்து "ரா ரா ராமா இன்டிக்கு ரா ரகுவீரா சுகுமாரா என்று பாடி களிக்கிறார்

இவ்வாறாக தியாகய்யரின் கிருதிகள் அனைத்தும் உண்மை வாழ்கை சம்பவங்களுடன் பின்னி பிணைந்தவையாகும்.சாதாரண மக்கள் கூட எளிதாக பின்பற்ற கூடிய பக்தி ரசமும் சரணாகதி பற்றினையும் கொண்டவையாகும்.

அடுத்த கேள்வி
ஸ்வாமி கடவுள் உருவமற்ற நிர்குண பரபிரம்மம் ஆவார். சாதாரண மனிதர்களான நாங்கள் மூன்று குணங்களான தமஸ் ரஜஸ் சத்விக் இவற்றில் ஊறி திளைப்பவர்கள்.

அப்படி இருக்கும் போது எங்களால் எப்படி உருவமற்ற நிர்குண பரபிரம்மத்தை அனுபவித்து அறிய முடியும்.

ஸ்வாமியின் பதில்
கடவுளை குணம் உடையவராகவும் அனுபவிக்க முடியும்.நிர்குண பிரம்மமாகவும் அனுபவித்து அறிய முடியும்.
இங்கே நீங்கள் முக்கியமாக தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுதான்.
இறைவனை போற்றுகின்ற கல்யாண குணங்கள் அனைத்திலும் கூட இறைவே இருக்கின்றார்.
அதே சமயம் இந்த குணாதிசயங்களையும் தாண்டியவராகவும் திகழ்கிறார்.
குணங்களுக்கு இறைவனுடைய சேர்க்கை இல்லை என்றால் மதிப்பில்லை.
நகைகள் அனைத்திலும் மூலமாக தங்கம் இருக்கிறது. ஆனால் தங்கத்தில் நேரடியாக நகைகள் கிடையாது .இது போலவே களிமண்-பானை
வெள்ளி-ஆபரணம் என்று சொல்லி கொண்டே போகலாம்.
எனவே கடவுளின் கல்யாண குணங்களுடனே அவரை அனுபவிக்கலாம்
குணங்கள் தாண்டி நிர்குண பரபிரம்மமாகவும் அறிந்து அனுபவிக்கலாம்.

மனிதன் மூன்று குணங்களால் ஆனவன்.அதில் எந்த குணம் மேலோங்கி உள்ளதோ அதுவே அவனது எண்ண ஓட்டங்களை தீர்மானிக்கிறது.
எண்ணங்களே செயல் புரிதலை தீர்மானிக்கின்றது.எனவே இந்த மூன்று குண உணர்வுகளையும் கடக்கும் போது கடவுளை- (உள்ளே உறைபவர் கடவுள்) முழுவதுமாக அனுபவித்து ஆனந்திக்க இயலும்

அனைவருக்கும் நன்றி
மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் சந்திப்போம்
ஜெய் சாயிராம்